7. இறுதித் துணை மதிப்பீடுகள் 1983-84—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். 1983-84 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், எதிர்பாக்கப்பட்ட செலவினங்கள் அனைத்தை யும் சேர்க்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும், வறட்சி, வெள்ளம் போன்ற தவிர்க்க முடியாத சூழ் நிலைகள் உருவானதாலும், தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் சிலவற்றில் அதிகச் செலவு ஏற்பட்டுள்ளதா லும், மக்களின் நலனுக்காகச் சில புதிய திட்டங்கள் தொடங்கப் பட்டுள்ளதாலும், இந்தத் துணை மதிப்பீடுகளை தற்பொழுது அவைமுன் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 1130.10 கோடியில் ரூ. 220.24 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 909.86 கோடி மூலதன, கடன் கணக்கிலும் வருகின்றன. துணை மதிப்பீடுகள் மூலம் சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் கூடுதல் தொகை குறித்த விவரங் களும், அதற்கான காரணங்களும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் முக்கியமான இனங்களை இங்கு கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட கடும் வறட்சியிலிருந்து இம்மாநிலம் விடுபட்டு வரும் நிலையில், டிசம்பர் திங்களில் ஏற்பட்ட பெருவெள்ளத்தாலும், பிப்ரவரி, மார்ச் திங்களில் பெய்த பெருமழை காரணமாகவும் இம்மாநிலம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. இந்நிலையைச் சமாளிக்க மாநில அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. வெள்ளத் துயர் துணிப்புப் பணிகளை மேற்கொள்வ தற்கு, அரசு ஏற்கனவே ரூ. 37.54 கோடி செலவிட அனுமதி வழங்கியுள்ளது. இத்துடன் மேற்கொண்டும் ரூ. 7.64 கோடி செலவிட அரசு இப்போழுது அனுமதி வழங்கியுள்ளது. இதில் சாலைகளையும், பாலங்களையும் பழுது பார்ப்பதற்காக ரூ. 13.60 கோடியும், பாசன வாயில்களைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 8.00 கோடியும், கருணை அடிப்படையில் உதவித் தொகையும், ஏனைய பொருட்களும் அளிக்கும் வகையில் ரூ. 15.26 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. பல்வேறு பழுது பார்ப்புப் பணிளை மேற் கொள்வதற்கும், சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், கடன் கால அளவை மாற்றியமைக்கவும், வேளாண்மை இடு பொருட் களை வழங்குவதற்கும், நகராட்சிகளுக்கும், சென்னை மாநக ராட்சிக்கும் உதவுவதற்காக எஞ்சிய தொகை ஒதுக்கப்பட்டுள் ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 23

3. கல்வி முன்னேற்றத்திற்கு முதன்மை அளித்து, மாணவர்கள் தங்களுடைய படிப்பைத் தொடர்வதற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதுதான் இம்மாநில அரசின் தலையாய கொள்கையாகும். அண்ணா போக்குவரத்துக் கழகமும், பல்லவன் போக்குவரத்துக் கழகமும் மாணவர்களுக்கு அளித்துள்ள கட்டணச் சலுகை தொடர்பாக, அவற்றிற்கு உதவித் தொகை அளிப்பதற்காக, அரசு ரூ. 6.19 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாப்பதில் அரசு இடையறாது நாட்டம் செலுத்தி வருகிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தயாரிக்கும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்குத் தள்ளுபடி அளிப்பதற்காக, அவற்றிற்கு உதவித்தொகை வழங்கும் வகையில், அரசு, வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையைவிடக் கூடுதலாக ரூ. 9.86 கோடியை தற்பொழுது ஒதுக்கியுள்ளது.

5. கிராமப்புற நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ், ரூ. 8.90 கோடி செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில், கிராமப்புற இணைப்புச் சாலைகளை அமைக்க ரூ. 3 கோடியும், பாசனத் திட்டங்களை நிறைவேற்ற ரூ. 3 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது; ரூ. 2.9 கோடி மண்வள—நீர்வள பாதுகாப்புப் பணிகளுக்காகவும், நில மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பைப் பெருக்கும் என்றும், சமுதாயத்திற்குப் பயன் தரும் நிலையான சாலைகளையும் பாசன வாயில்களையும் உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

6. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் கிராமப்புற சத்துணவுக் கூடங்களுக்குக் கூடுதலாகச் சமையல் பாத்திரங்கள் வாங்குவதற்கு, அரசு ரூ. 48.17 இலட்சம் செலவிட அனுமதி வழங்கியுள்ளது.

7. கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத்திற்கு ரூ. 36 கோடி ஒதுக்க, அரசு அனுமதி வழங்கியுள்ளது. கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்ட தொகையைவிடக் கூடுதலாக ரூ. 3.95 கோடி செலவிடப்படும். இந்தக் கூடுதல் செலவும் இந்த இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8. ரோட்டரி துளையிடும் கருவிகளை வாங்குவதற்கு அரசு ரூ. 99 இலட்சம் செலவிட அனுமதி வழங்கியுள்ளது. இது மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் வள நிறுவனங்களை வலுப்படுத்தும். இச்செலவின் ஒரு பகுதி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானிய மீதத்திலிருந்து மறு நிதி ஒதுக்கம் செய்வதன்மூலம் பெறப்படும்.

9. பூம்புகார் கப்பல் போக்குவரத்து நிறுவனத்திற்குப் பங்கு மூலதன நிதியுதவி வகையில் ரூ. 1.10 கோடி வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிறுவனம் பெரிய அளவிலான கப்பல்களை வாங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது அனல் மின் உற்பத்திக்குக் குறைந்த செலவில் நிலக்கரியைக் கொண்டு வருவதற்குப் பேருதவியாக இருக்கும்.

10. கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதிலும், உழவர்களின் நலனைப் பாதுகாப்பதிலும் அரசு முழுக்கவனம் செலுத்தி வருகிறது. தஞ்சாவூர், கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் புதிய கடன்களை வழங்குவதற்காக இவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 கோடி என்ற வீதத்தில் அவற்றிற்கு ரூ. 2 கோடி வழிவகை முன்பணம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இச்செலவு துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

11. 1983-84ஆம் ஆண்டில் 31 நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அவற்றிற்கு ரூ. 5 கோடி (மானியமாக ரூ. 4.44 கோடியும், கடனாக ரூ. 0.56 கோடியும்) வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 5 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்ட பிறகு, இத்தொகை மேற்படி நிதியில் ஈடு செய்யப்படும்.

12. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையை அரசு மேற்கொள்வது என்று முடிவு செய்துள்ளது. இருப்புகளுக்காக நிலுவையாக உள்ள பட்டிகளுக்குத் தொகை கொடுப்பதற்காகக் கூடுதலாக ரூ. 1.5 கோடி செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

13. இந்தத் துணை மதிப்பீட்டில் கேட்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்கள் தொடர்பான முக்கியமான சில திட்டங்களை மட்டுமே நான் இங்கு கோடிட்டுக் காட்டியுள்ளேன். இதில் உள்ள அனைத்து இனங்களுக்கும் ஒப்புதல் அளித்து, அவற்றிற்குத் தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்குமாறு அவையை வேண்டி அமருகிறேன். வணக்கம்.